Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 66

செவ்வாய்க்கிழமை 31 ஜனவரி 2023

தை 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## கூட்டமைப்பை உடைத்ததைப்போல் தமிழரசையும் பிளக்கிறார் சுமந்திரன்

### அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கட்சிக்குள் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜன. 31
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்ததைப்போல இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையும் உடைக்கும் நடவடிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார். அவருக்கு எதிராக கட்சி »11

## சுமந்திரன் வந்தவேலையை சிறப்பாகச் செய்துவிட்டார்!

### சாடுகிறார் தவராசா

யாழ்ப்பாணம், ஜன. 31
நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எதற்காக வந்தாரோ அதைச் சரியான முறையில் செய்து முடித்திருக்கிறார் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய, அரசியல் குழுக்களின் உறுப்பினரும், கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான »11

## தேர்தல் திகதி குறிக்கப்பட்ட வர்த்தமானி நேற்று வெளியீடு

**யாழ்ப்பாணம், ஜனவரி 31**

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேர்தல் திகதி குறிக்கப்பட்ட வர்த்தமானி அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டு அது வெளியிடப்பட்டுள்ளது.** »11

## தபால்மூல வாக்களிப்பு பெப். 20 இல் ஆரம்பம்!!!

கொழும்பு, ஜன. 31
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் கடந்த 23 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைந்தது. இந்நிலையில் தபால் மூல வாக்களிப்புக்குத் »11

## தாய்நாட்டை நேசிப்பவர்கள் கரிநாளை கடைப்பிடிக்கார்!

### இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஜன. 31
இலங்கையில் பிறந்த எந்தக் குடிமகனும் - தாய்நாட்டை நேசிக்கும் எந்தப் பிரஜையும் - தேசிய சுதந்திரதினத்தை கரிநாள் என்றோ - கறுப்பு நாள் என்றோ சொல்லமாட்டார்கள். அப்படியானவர்கள் தேசிய சுதந்திர »09

## போராட்டத்தால் நடுங்கும் படைகள்

### ஒளிப்படமெடுத்து அச்சுறுத்தல்

அம்பாறை, ஜன. 31
அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் திருக்கோவிலில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப் »09

## தாயின் சிறுநீரகம் மகளுக்கு யாழில் வெற்றிகரமான சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ். போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை வெற்றி அளித்துள்ளமையானது வரலாற்றுச் சாதனை என்று மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். மருத்துவமனையில் நேற்று »11

## மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஜன. 31
இன்று மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது என »09

## மின்தடை தொடர்வதால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

### மனித உரிமைகள் ஆணைக்குழு அதிரடி

கொழும்பு, ஜன. 31
உயர்தரப் பரீட்சைக் காலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான வாக்குறுதியைக் கடைப்பிடிக்கத் தவறியமைக்காக இலங்கை »09

மணிவண்ணன் தலைமையிலான ஆட்சியில்

## சபைக்குத் தெரியாமல் ஒப்பந்தம்; மாநகரசபையால் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ்ப்பாணம் மாநகரசபை மேஜராக வி.மணிவண்ணன் பணியாற்றிய காலத்தில், தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் முன்னெடுத்த ஒப்பந்தத்தின் பிரதி சபைக்கு சமர்ப் »11

## எனது செயற்றிட்டங்களை நிறுத்துகிறார் ஆர்னோல்ட்

### சாடுகிறார் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ். கஸ்தூரியார் வீதிக்கு மத்தியில் உள்ள நகரக் குளத்தை, தனியார் நிறுவனமொன்றின் 8 கோடி பெறுமதியான நிதிப்பங்களிப்பில் புனரமைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட »11

## ஊடகர் நிபோஜன் விபத்தில் சாவு!



யாழ்ப்பாணம், ஜன. 31
கிளிநொச்சி ஊடகவியலாளரான எஸ்.என்.நிபோஜன் கொழும்பில் நேற்று இடம்பெற்ற »09

## பதிவேட்டில் கையொப்பம் இட்டுவிட்டு வெளிநடப்புச் செய்த மணி தரப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு மேயர் இ.ஆர்னோல்ட் தலைமையில் நேற்று ஆரம்பமானபோது, முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் அணியினர் வெளிநடப்புச் செய்தனர்.
முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட அவர் தரப்பைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் வரையில் மாநகர சபையின் வரவுப் பதிவேட்டில் கையெழுத்திட்டுள்ளனர். »09






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் தேர்தலை நடத்தப்போவதில்லை!

## குமார வெல்கம காட்டம்

கொழும்பு, ஜன. 31

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமே தவிர தேர்தல் நடத்தப்படமாட்டாது. தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நிச்சயம் பிற்போடும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. தேர்தலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என காண்பிக்கப்படுமே தவிர தேர்தல் நடத்தப்படமாட்டாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுனவுக்கு மக்களாணை கிடையாது.

தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் ஏதாவதொரு வழிமுறையில் உள்ளூராட்சித் தேர்தலை அரசாங்கம் பிற்போடும். உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயார் என மக்கள் மத்தியில் குறிப்பிடும் அரசாங்கம் தேர்தலை பிற்போட திரைமறைவில் இருந்துகொண்டு அரசியல் சூழ்ச்சி செய்கிறது. தேர்தலை பிற்போடலாம்.

ஆனால், மக்களின் அரசியல் தீர்மானத்தைப் பிற்போட முடியாது.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக கட்டுப்பணத்தை பெற்றுக்கொண்டு அரசாங்கம் கோடிக் கணக்கில் கஷ்டமில்லாமல் சம்பாதித்துள்ளது. கட்டுப்பணத்தை எதிர்வரும் ஆறு அல்லது ஒரு வருடத்துக்குத் தாராளமாக பயன்படுத்தலாம்.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகளையே தோற்றுவிக்கும் - என்றார். (ம)

# தேர்தல் நடத்துவதால் ஏற்படும் நெருக்கடிக்கு எவர் பொறுப்பு?

## அமைச்சர் அமரவீர கேள்வி

கொழும்பு, ஜன. 31

அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயார். ஆனால் நாட்டு மக்கள் தேர்தலுக்குத் தயாரில்லை. நிதி நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் தீவிரமடையும் பொருளாதார பாதிப்புக்கு யார் பொறுப்பேற்பது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயத்துறைக்கு ஏற்பட்ட பாதிப்பு பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணியாக உள்ளது. கடந்த அரசாங்கம் விவசாயக் கொள்கையை ஒரே கட்டமாக மாற்றியமைத்ததால் விவசாயத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்து இறுதியில் பெரும் விளைவுகள் ஏற்பட்டன.

விவசாயத்துறையில் அறிமுகப்படுத்திய தவறான கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் இரசாயன உரம் விநியோகிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு சிறுபோக மற்றும் பெரும்போகத்தில் சிறந்த விளைச்சலைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன.

அரசமைப்புக்கு அமைய உரிய காலத்தில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அனைத்து காரணிகளையும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் தேர்தலுக்கு தயார் ஆனால் நாட்டு மக்கள் தேர்தலுக்கு தயாரில்லை. நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

தேர்தலை நடத்த வேண்டுமாயின் பணம் அச்சிட வேண்டும், பணத்தை மீண்டும் அச்சிட்டால் தீவிரமடையும் பொருளாதாரப் பாதிப்புக்கு யார்? பொறுப்புக் கூறுவது - என்றார். (ம)

### ஆணைக்குழுவினருக்கு

# வெளிநாட்டிலிருந்தே மரண அச்சுறுத்தல்!

## பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31



தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மரண அச்சுறுத்தல்கள் மற்றும் குறுஞ்செய்திகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து விடுக்கப்பட்டவை.

அது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எம்.எம்.மொஹமட் மற்றும் பி.திவாரத்ன ஆகியோரைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி தொலைபேசியின் ஊடாக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவர்களுக்குத் தேவையான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு குறித்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அவர்கள் இருவருக்கும் ஒரே வகையான தொலைபேசி இலக்கத்தில் இருந்து இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த தொலைபேசி இலக்கமானது காலி பிரதேசத்தில் உள்ள முகவரியுடன் கூடிய தொலைபேசி இலக்கமாகும். இருப்பினும், அந்த முகவரியில் உள்ளவர் தற்போது இலங்கையில் இல்லை என்பதும், இது குறித்து அவருக்கு எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இதுவிடயத்தில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ம)

# தேர்தலை நடத்துவதற்கான சூழலை உருவாக்கித்தருக!

## ஜனாதிபதியிடம் கோரியது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 31

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்தவேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்த விடயத்தில் ஜனாதிபதி தலையிடுவதன் மூலம் சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனவரி 28ஆம் திகதி இது தொடர்பான கடிதமொன்றை நாங்கள் ஜனாதிபதிக்கு எழுதியுள்ளோம். அவர் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளோம். நாட்டில் நியாயமான சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி தலையிடவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். பொலிஸ்மா அதிபரை தலையிடுமாறும் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நாங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளோம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

### சு.கவை உடைப்பதற்கு நிமால் புதிய வியூகம்!

# உள்ளூராட்சிசபைகளுக்கு வேட்பாளர்களை இறக்கினார்

கொழும்பு, ஜன. 31

சுதந்திரக்கட்சியில் இருந்து விலகி அரசாங்கத்தில் இணைந்துள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தனது அணியொன்றை உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நிறுத்தியுள்ளார்.

இதனடிப்படையில் பதுளை மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் 'ரி சேர்ட்' சின்னத்தில் இவரது அணியினர் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றனர். பதுளை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிராகவே நிமால் சிறிபால டி சில்வா தனது அணியை தேர்தலில் களமிறக்கியுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராவார். இதன் காரணமாகவே தமது மாவட்டத்தில் தனியான அணியை தேர்தலில் களமிறக்கியுள்ளார் என்று பேசப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தமிழரசு வேட்பாளருக்கு கொலை அச்சுறுத்தல்!

## பொலிஸாரிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜன. 31
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிடவுள்ள நிலையில் எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. நான் தேர்தலில் போட்டியிடுவது பல தரப்பினருக்கு விருப்பமில்லாத சூழ்நிலை காணப்படுகின்றது. அதனால் என்மீது கொலை அச்சுறுத்தல்கள் வந்தவண்ணமுள்ளன.

தேர்தல் வேட்பாளராக அறிமுகமான பின்னர் கடந்த 25ஆம் திகதிவரை தொலைபேசியில் இரண்டு தடவைகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்கள். வெளியில் வந்தால் கொலைசெய்வோம் என்று தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். எதிர்த்தரப்பினரின் தோல்விப்பயம் காரணமாக இந்த மிரட்டல்களை அவர்கள் விடுகின்றார்கள் - என்றார். (ம-19)

# தமிழரசின் வேட்பாளர்கள் கொலைகாரர்கள் இல்லை

## தேர்தல் பரப்புரையில் இரா.சாணக்கியன் விளாசல்



கொழும்பு, ஜன. 31
நாம் சிவநேசதுரை சந்திரகாந்தனைப்போல் கொலைகாரர்களைத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக்கொள்ளவில்லை. வெறுமனே சோற்றுக்காகப் போராடும் இனம் நாமல்ல என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றியின் மூலம் உறுதிப்படுத்தவேண்டும் – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'கடந்த காலங்களில் தவறானவர்களைத் தெரிவுசெய்து மக்கள் தாம் செய்த தவறை நிவர்த்தி செய்வதற்கான முதலாவது சந்தர்ப்பமாக இந்தத் தேர்தல் இருக்கின்றது. ஜனநாயக ரீதியில் சர்வதேசத்துக்கும் இந்தப் பெரும்பான்மை அரசுக்கும் எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு இந்தத் தேர்தல் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக எமக்கு அமைந்திருக்கின்றது. எனவே, நாம் இந்தச் சந்தர்ப்பத்தை நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அரசு தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையில் ஈடுபடுமாக இருந்தால் அது மக்களது ஜனநாயக சுதந்திரத்தில் கைவைக்கும் நிலைப்பாடு ஆகும். ஆனால், அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால் அதற்கும் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் பின்னிற்க மாட்டோம். எனவே, நாம் எமது தேர்தல் வெற்றிகளை முன்னிறுத்திச் செயற்படுவதற்கு அனைவரும் தமிழரசுக் கட்சியின் தலைமையில் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது வேட்பாளர்களை நாம் தேடித் தேடி தெரிவு செய்தோம். அந்த வகையில் எமது வேட்பாளர் பட்டியலில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட கல்விமான்களே உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர். எமது கட்சியில் எந்தவொரு ஊழல், மோசடி, கொலைக் குற்றச்சாட்டு மற்றும் மண் மாபியாவில் ஈடுபட்டவர்கள் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். நாம் சிவநேசதுரை சந்திரகாந்தனைப்போல் கொலைகாரர்களைத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக்கொள்ளவில்லை.

ஆட்சியாளர்களின் ஊழல், மோசடி உள்ளிட்ட தவறுகளால் நாட்டு மக்களுக்குத் தற்போது பொருளாதார சுதந்திரம்கூட மறுக்கப்பட்டுள்ளது. மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமலிருக்கின்றனர். எனவே, நாம் கிழக்கில் கறுப்புச் சுதந்திர தினத்தை கடைப்பிடிக்கத் தயாராகி வருகின்றோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அந்தவகையில் கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழர்களுக்கு அரசியல் சுதந்திரம் மறுக்கப்பட்டு வந்துள்ளதைக் காண்கின்றோம். எனவே, இந்தமுறை சுதந்திர தினத்தில் நாம் எமது எதிர்ப்பைக் கிழக்கில் வெளிப்படுத்துவதற்குத் தயாராகி வருகின்றோம் - என்றார். (ம-22)

# தேசிய வரைவுகளுக்கு அமைய நெருக்கடிகளுக்குத் தீர்வில்லை!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31
தேசிய மட்டத்திலான பொருளாதார வரைபுகளுக்கு அமைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது. பொருளாதார பாதிப்புக்கு விரைவாக தீர்வு காணாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது. பொருளாதார மீட்சிக்கான திட்டம் எம்மிடம் உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

குருநாகலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு வரலாற்றில் என்றுமில்லாத வகையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு வெகு விரைவாக தீர்வு காணாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரை நாடு எவ்வாறான நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தற்போது நாட்டுக்கு அதிகளவில் வருகிறார்கள். வெளிநாட்டு செலாவணி அதிகம் கிடைக்கப்பெறுகிறது. ஆகவே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு விட்டோம் என ஆளும் தரப்பு குறிப்பிடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகும். வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழ வேண்டுமாயின் இலங்கையின் முதன்நிலை கடன் வழங்குநர்களின் இணக்கப்பாட்டுடன் வெளிநாட்டு கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். அல்லது கடன் செலுத்தல் தவணையை பிற்போட வேண்டும்.

சர்வதேச பிணைமுறி தனியார் கடன் வழங்குநர்களுக்கு 14 பில்லியன் டொலர் செலுத்த வேண்டியுள்ளது. மறுபுறம் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் பிரதான நிலை கடன் வழங்குநர்களாக உள்ளனர். பிரதான நிலை கடன் வழங்குநர்களின் இணக்கப்பாட்டுடன் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டுமாயின் சர்வதேசத்தின் நம்பிக்கையை அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த அரசாங்கத்துக்கு சர்வதேச அங்கீகாரம் உள்ளதா என்பது சந்தேகத்துக்கு உரியதாக உள்ளது. தேசிய மட்டத்திலான பொருளாதார வரைபுகளுக்கு அமைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணும் திட்டங்கள் எம்மிடம் உள்ளன - என்றார். (ம)

# அரசுடன் இணையும் திட்டங்கள் இல்லை

## ராஜித சேனாரத்ன அழுத்தம்திருத்தம்

கொழும்பு, ஜன. 31
தனிமையில்போய் அரசுடன் இணையும் திட்டம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ராஜித அரசுடன் இணையவுள்ளார் என்றும், அதற்குரிய நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகின்றார் என்றும் அண்மைக்காலமாக தகவல்கள் வெளிவந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'2015ஆம் ஆண்டு மஹிந்தவை விட்டு வந்து மைத்திரியை ஜனாதிபதியாக்கும் முயற்சியில் இறங்கிய போது ஐக்கிய தேசியக் கட்சி 22 வீதமான வாக்குகளுடன் மாத்திரம் இருந்தது. ஒன்றரை மாதங்களில் 52 வீதமாக அதை அதிகரித்தோம். தனிமையில் போய் அரசுடன் இணையும் திட்டம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை. என்னைப் போல் நினைக்கும் நபர்கள் எதிர்க்கட்சிகளில் உள்ளனர். நான் இந்த நிலைப்பாட்டை முன்வைத்தும் அவர்கள் என்னுடன் இப்போது இதுபற்றிப் பேசுகின்றார்கள். அவர்கள் நல்ல பெயர்களை வைத்திருப்பவர்கள். இதுபற்றி நான் ரணிலுடன் பேசவில்லை.

நாட்டை முன்னேற்றும் வடிவம் பற்றி ரணிலுடன் பேசியிருக்கிறேன். ஒரு தடவை நிதி நிலைமை பற்றி விசாரித்தேன். பரவாயில்லை பல இடங்களில் இருந்து நிதிவரும் என்றார் ரணில். அவருடன் பேசி போராட்டக்காரர்களை கைதுசெய்வதை நிறுத்தினேன். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

அவரும் நானும் ஜனநாயகத்துக்காக மனித உரிமைகளுக்காகப் போராடியவர்கள். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையையும் தேர்தல் முறைமையையும் நான் அன்றிலிருந்து வெறுக்கின்றேன். ஐக்கிய மக்கள் சக்தி அரசை பாரமேற்றுச் செய்யாவிட்டால் அடுத்த போராட்டம் வெடிக்கும். மீண்டும் வீடுகளை எரிப்பார்கள். அடுத்தது நாங்கள் இயலாதவர்கள் என்று முத்திரை குத்தப்படுவோம்' - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடைபெறுமா? மக்களுக்குச் சந்தேகம்

## கபே அமைப்பினர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 31

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான கட்டுப்பணங்கள் செலுத்தி முடிக் கப்பட்டு தேர்தல் நடைபெறும்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இன்னும் கூட பொதுமக்களுக்கும் அதிகமான தேர்தல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கும் தேர்தல் நடைபெறுமா? நடைபெறாதா? என்ற ஒரு சந்தேகம் காணப்படுகின்றது – இவ்வாறு கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ்மகீன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற கபே அமைப்பின் ஜனனி நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்றாவது அமர் வில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே கபே அமைப் பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; உள்ளூராட்சி சபைத் தேர்தல் களோ வேறு தேர்தல்களோ இது வரை நாட்டில் நடைபெற்று இருந்தாலும் இந்த முறை நடக் கவிருக்கும் தேர்தல்தான் பலத்த சந்தேகத்துக்கு மத்தியில் நடை பெறவிருக்கும் தேர்தலாகும். இதுவரை இந்தத் தேர்தலை பிற்போடுவதற்கு 17க்கும் மேற் பட்ட தடவைகள் பல்வேறு தரப்பி னர் பல்வேறு முயற்சிகளை செயற் படுத்திக் கொண்டுள்ளனர் என் பது கவலை அளிக்கின்றது. இது ஒருபுறம் இருக்க கடந்த காலங் களிலே தேர்தலில் போட்டியிடு கின்ற கட்சிகளுக்கு, வேட்பாளர் களுக்கு, ஆதரவாளர்களுக்குத் தான் அச்சுறுத்தல் மேற்கொள் கின்ற சம்பவங்கள் இடம்பெற்றன. ஆனால் இந்தமுறை தேர்தலை நடத்துவதற்குரிய மிகவும் முக் கிய பங்குதாரரான தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்க ளுக்கு தொடர்ச்சியாக அச்சுறுத் தல்கள் விடுக்கப்பட்ட வண்ண முள்ளன - என்றார். (ம-14,159)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தா லும், தேவையற்ற செலவுகளும் ஏற்ப டக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பணவர வுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். தொடங்கிய காரி யங்கள் அனுகூலமாகமுடியும். எதிர் பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** தந்தை வழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை. சகோதரர்க ளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர் கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டா லும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகை யில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சில ருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**துலாம்:** கணவன் – மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவர வுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். சகோதர வகையில் எதிர் பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர் பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை பிற்பக லுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல்நலனில் கவ னம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவுஏற்பட்டுசரியாகும்.

**கும்பம்:** மனதில் தைரியமும் தன்னம் பிக்கையும் அதிகரிக்கும். காரியங்க ளில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது.

**மீனம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவு களால் கடன் வாங்க நேரிடும். முக்கி யமான முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.



# இயற்கையைக் காப்பாற்றுமாறு மணற்காட்டில் நேற்றுப் போர்!

யாழ்ப்பாணம், ஜன. 31

சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோத சவுக்கு மரம் வெட் டுதல் மற்றும் போதைப்பொருள் பாவனை உள்ளிட்டவற்றைத் தடுக்கக்கோரி மணற்காட்டுப் பகுதியில் நேற்றுப் போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

மணற்காடு சவுக்கம் தோப்புப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கப் பட்ட பேரணி, இளைஞர்களின் பங்குபற்றுதலோடு மணற்காடு தேவாலயம் வரை சென்றது.

இதன்போது 'மரங்களை வெட்டி வளங்களை அழிக்காதே', 'போதைப்பொருள்களைக் கட் டுப்படுத்து', 'சட்டவிரோதமான மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துங்கள்' உட்பட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகை களை ஏந்தியவாறு அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

(ம-14,113)

## பல்கலைக்கழகத் தெரிவுக்காக

# பெறுபேற்றை மீளாய்வு செய்வோர் மேன்முறையீடு செய்தால் போதும்

யாழ்ப்பாணம், ஜன. 31

2023ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனும திக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தமது க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு களை மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பித்தி ருந்தால் அவர்கள் புதிதாக விண்ணப்பங்களை அனுப்பத்தேவையில்லை என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள் ளது.

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மேன் முறையீடு செய்தாலே (அப்பீல்) போது மானது எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

# நுழைவு வாயில் திறப்பு விழா

முல்லைத்தீவு, ஜன. 31

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்தின் நுழைவு வாயில் திறப்பு விழா, இன்று செவ்வாய்க்கி ழமை முற்பகல் 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் க.ஜெயவீர சிங்கம் தலைமையில் நடைபெற வுள்ள நிகழ்வில் முதன்மை விருந் தினராக முல்லைத்தீவு மேலதிக மாவட்டச்செயலர் க.கனகேஸ்வ ரன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-14,13)

# கணுக்கேணி கிராமத்தில் வீதி விளக்குகள் சேதம்!

முல்லைத்தீவு, ஜன. 31

முல்லைத்தீவு கணுக்கேணி கிரா மத்தின் வீதி விளக்குகள் விஷமிக ளால் அடித்து நொருக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன. கரைது றைப்பற்று பிரதேசசபையால் பொருத்தப்பட்ட வீதி விளக்கு களே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள் ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடை பெறவுள்ளதை முன்னிட்டு, கட்சி கள் தேர்தல் பரப்புரையில் ஈடுபட் டுள்ள நிலையில் 5க்கும் மேற்பட்ட வீதி விளக்குகள் சேதமாக்கப்பட் டுள்ளன என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-14,13)

# ஏகாதசி உற்சவம்

பளை ஜன.31

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோயிலில் வீம ஏகா தசி உற்சவம் நாளை புதன்கிழமை இடம் பெறும். இரவு விசேட அபிசேகமும் நான்கு சாமப் பூஜை வழி பாடும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (ய-9)

# நாட்டில் டெங்கு அதிதீவிர நிலை

கொழும்பு, ஜன. 31

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் வர லாறு காணாத உயர்வைப் பதிவுசெய்துள்ளது என்று தொற்றுநோயியல் பிரிவு தெரி வித்துள்ளது.

இது தொடர்பில் அந்தப்பிரிவு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடத்தின் கடந்த சில நாள்களில் 4 ஆயிரத்து 387 டெங்கு நோயாளர்கள் பதிவா கியுள்ளதோடு, அவர்களில்



32.5 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தில் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 10 மாதங்களில் மாத் திரம் 20 ஆயிரத்து 334 டெங்கு நோயாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் டெங்கு நோயால் 145 நோயாளர்கள் உயிரிழந் துள்ளனர்.

இந்த நாள்களில் பதிவாகும் காய்ச்சலின் அறிகுறிகளும் டெங்கின் அறிகுறிகளும் பெரும்பாலும் ஒத்திருப்பதால், நோயின் நிலையைத் தீர்மா னிக்காமல் உட்கொள்ளும் மருந்துகளால் பல்வேறு சிக் கல்கள் ஏற்பட்டுள்ளதாக மருத் துவர்கள் தெரிவிக்கின்றனர். - என்றுள்ளது. (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எதிர்ப்புகள் பலமாகட்டும்

சிறிலங்காவின் சுதந்திரதினமான பெப்ரவரி நான்காம் நாளை தமிழர் தாயகத்தின் கறுப்பு நாளாக அறிவித்து, பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர் தனியாகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் தமிழரசுக் கட்சியினர் தனித்தனியாகவும் இந்தப் போராட்டங்களையும் பேரணிகளையும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். சிறிலங்காவின் சுதந்திரதினத்தை கறுப்பு நாளாக அறிவித்துப் போராட்டங்களும் பேரணிகளும் இடம்பெறுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. கடந்த ஒரு தசாப்தமாகவே பெப்ரவரி நான்காம் நாளில் தமிழர் தாயகத்தின் காட்சிகளும் கோலங்களும் இதுதான். அந்த வகையில் இதுவொரு தொடர்கதை. ஆனால், இதுவரை முன்னெடுக்கப்பட்ட கறுப்புநாள் போராட்டங்களை விடவும், பேரணிகளை விடவும் இந்த வருடத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகள் மிக முக்கியமானவையாகவும் தவிர்க்கப்பட முடியாதவையாகவும் அமைந்திருக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரமடைந்த போதிலும் அந்தச் சுதந்திரம் தமிழர்களுக்கானதல்ல. தமிழர்கள் இன்னமும் சுதந்திரக்காற்றை சுவாசிக்கவில்லை. அவர்களின் உரிமைகளும் தேவைகளும் கௌரவங்களும் எதிர்பார்ப்புக்களும் சிங்கள தேசத்தால் சிதைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பின்னணியில் அதை வெளியுலகுக்குப் பறைசாற்றுவதற்காகத்தான் இதுநாள்வரையில் முன்னெடுக்கப்பட்ட கறுப்பு நாள் பேரணிகள் அமைந்திருந்தன. ஆனால், சிறிலங்காவின் இந்த வருடச் சுதந்திரதினமானது எங்கு வேறுபடுகின்றது என்றால், அது சிறிலங்கா அரசாங்கத்தின் ஏமாற்றுவித்தையை, பேரினவாதத் தலைவர்களின் போலி வாக்குறுதிகளை பறைசாற்றும் விதமாகவும் அமைந்திருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எதிர்வரும் சுதந்திரதினத்துக்குள் தீர்வு வழங்கப்படும், அது அனைவரும் ஏற்கும்படியான தீர்வாக அமையும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மூன்று மாதங்களாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வலியுறுத்தி வருகின்றார். 70 ஆண்டுகாலப் பிரச்சினையை மூன்றே மாதங்களுக்குள் தீர்ப்பதாகத் தெரிவித்த அவருடைய கருத்தை – தீர்வு தொடர்பான குறைமதிப்பீட்டை பலரும் விமர்சித்தனர். எனினும் ரணில் தன் கருத்தில் உறுதியாகவிருந்தார். சர்வதேசத்தை கவர்வதற்கும் (ஏமாற்றுவதற்கு) இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருண்மிய இடர்பாட்டைச் சரிசெய்வதற்கும் இந்தப் போலியான குறுகிய காலவரை அவகாசம் அவருக்குத் தேவையாகவிருந்தது. ஆனால், ரணில் வெளிப்படுத்திய கருத்துக்களில் ஒன்றுகூட மெய்ப்பட்டபாடில்லை.

சுதந்திரதினத்துக்கு இன்னும் நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கையில் தீர்வு தொடர்பான எந்தப் பலமான பொறிமுறையையோ அல்லது நம்பிக்கை தரக்கூடியதான நகர்வையோ ரணில் வெளிப்படுத்தவில்லை. மட்டுமல்லாமல் காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், அரசியல்கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என்று எதிலும் தீர்க்கமான நடவடிக்கைகள் இல்லை. மேற்படி விடயங்களில் இதுவரை வெளிவந்த அறிவிப்புக்கள்கூட வெறும் பூர்வாங்க நடவடிக்கைகளுடன் முற்றுப் பெற்றுவிடுமோ என்ற ஐயம்தான் தற்போது மேலிட்டிருக்கின்றது. இப்படியானதொரு பின்னணியில், இவ்வாறாகத்தான் ஈழத்தமிழர்களாகிய நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதை சர்வதேசத்துக்கு இம்முறை உரத்துச் சொல்லவேண்டிய கூடுதல் பொறுப்பு எம் தலைகளில் திணிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர்களின் இனப்பிரச்சினைகளை வைத்து அரசியல் சதிராட்டங்களை மேற்கொண்டுவரும் கொழும்புக்கு எம் எதிர்ப்பையும், அத்தகைய கொழும்புக்கு கொஞ்சமும் பஞ்சமில்லாமல் அவகாசங்களையும் சலுகைகளையும் வாரி வழங்கும் சர்வதேசத்துக்கு எம் அவலநிலையையும் வெளிப்படுத்துவதற்கு சமீப நாள்களில் கிடைத்த ஓர் ஆகச் சிறந்த வாய்ப்புத்தான் இந்தக் கறுப்புநாள் முன்னெடுப்புக்கள். இதில் எம்மை இணைத்து எம் எதிர்ப்பைக் கொழும்புக்கும் எம் நிலையை சர்வதேசத்துக்கும் பதிவுசெய்ய வேண்டியது இன்றிருக்கும் காலத்தேவையும் பொறுப்புமாகும். இதை நிறைவேற்ற வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கட்டமையும்கூட.

### நாளொரு நல்வார்த்தை

"அனுபவம் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறது, நம்பிக்கை உங்களை அதைச் செய்ய அனுமதிக்கிறது" – ஸ்டான் ஸ்மித்



# '13' ஐ விரைவில் முழுமையாக நடைமுறையாக்க வேண்டும்

## வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 31

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் என்பது சர்வதேச உடன்படிக்கையாகும். அதை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். எனவே, 13ஆவது திருத்தத்தை விரைவில் முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் – இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



ஹட்டனிலுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தமென்பது நாட்டின் அரசமைப்பில் இருந்தாலும், அது இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் போலியான விம்பம் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது வடக்கு, கிழக்குக்கு மட்டும் அல்ல, 9 மாகாணங்களுக்கும் அதன்மூலம் பயன் கிட்டும். எனவே, தமிழர்களுக்கு எதிரான சில சக்திகளே 13 தொடர்பில் போலிப் பரப்புரையை முன்னெடுத்து வருகின்றன. இவற்றை அரசு கருத்திற்கொள்ளாது. சர்வதேச உடன்படிக்கையான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

(ம-14,44)

# நீதிக்காகக் கத்தோலிக்கர்கள் வீதிகளுக்கு இறங்க வேண்டும்

## கர்தினால் வெளிப்படைப்பேச்சு

கொழும்பு, ஜன. 31

கத்தோலிக்க மக்கள் நீதிக்காகப் போராட வேண்டும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார். பொரளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய திருச்சபைக்கு தியாகம் செய்யும் கத்தோலிக்கர்கள் தேவையில்லை. நீதிக்காக போராடும் பாமர மக்களே தேவை. திருச்சபையின் பார்வையை நாங்கள் மாற்றவேண்டும். எங்களுக்கு இனிமேல் தியாகம் செய்யும் கத்தோலிக்கர்கள் தேவையில்லை. சமூகத்தின் உரிமைக்காக வீதிக்கு இறங்கி நீதிக்காக போராடும் கத்தோலிக்கர்களே தேவை- என்றார். (ம)

| நாளை | 01.02.2023 | சுபநேரம் : 05.06 – 06.36 |
| --- | --- | --- |
| | புதன்கிழமை | ராகுகாலம் : 12.36 – 02.06 |
| | தை 18 | பீமஏகாதசி விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்காக அரசியல்கைதிகளை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல் சுட்டிக்காட்டு



வவுனியா, ஜன. 31

அரசியலுக்காகத் தமிழ் அரசியல் கைதிகளையும், தமிழர்களையும் பாவிக்க வேண்டாம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளே தடையாக இருக்கின்றனர்' எனக் குறித்த நேரத்தில் வெடிக்கும் அரசியல் குண்டை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச வீசி இருக்கின்றார். அது செயல் இழந்த குண்டு. அவரது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதை அனைவரும் அறிவர். உங்கள் அரசியலுக்காகத் தமிழ் அரசியல் கைதிகளையும், தமிழர்களையும் பாவிக்க வேண்டாம் என மீண்டும் கூறுவதோடு குறித்த உள்நோக்கம் கொண்ட அரசியலை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும் என தமிழர்களும் அரசியல் கைதிகளும் பல்வேறு போராட்டங்களை கடந்த காலத்தில் நடத்தியபோது, 'நாட்டில் அரசியல் கைதிகளே இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களே உள்ளனர். அவர்களை நீதிமன்றத் தீர்ப்புக்கு அப்பால் விடுதலை செய்ய முடியாது' எனச் சிங்களப் பேரினவாத அரசியலை முன்னகர்த்தியவரே தற்போது தமிழ் அரசியல்வாதிகளை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளார்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் அரசியல் தீர்வு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்பட்டம் அடித்தார். ஆனால், அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தையே அமுல்படுத்த முடியாது எனப் பேரினவாதிகளின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்தநிலையில், இவர்கள் எத்தகைய அரசியல் தீர்வையும் தரப்போவதில்லை என ஆட்சியாளர்கள் மீதும் சிங்களப் பேரினவாதிகள் மீதும், தமிழர்கள் வெறுப்பும் கோபமும் கொண்டிருக்கின்ற சூழலில் நீதி அமைச்சர் சிறுபிள்ளைத்தனமாகத் தமிழர்களின் கோபத்தைத் திசைதிருப்ப நினைப்பது நகைச்சுவையே.

அரசியல் கைதிகள் அனைவரையும் அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழர்களின் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை அலட்சியப்படுத்தி பொதுமன்னிப்பின் கீழ் சில்லறைகளாக அரசியல் கைதிகளை விடுப்பது தமிழர்களையும், அரசியல் கைதிகளையும் அவமானப்படுத்தும் செயலாகும். இதனையும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

உங்கள் சுதந்திர தினத்தில் மூன்று அரசியல் கைதிகள் வெளியில் வரவுள்ளனர் என்று அறிகின்றோம். அவர்களோடும் குடும்பத்தாரோடும் நாமும் மகிழ்ச்சியடைகின்றோம். எனினும், ஒட்டுமொத்த அரசியல் கைதிகளும் அரசியல் தீர்மானம் மூலம் விடுதலை செய்யப்படுவது என்பது எமக்கான அரசியல் கௌரவம். அரசியல் கைதிகளுக்கான கௌரவம் என்பதை நீதி அமைச்சரும் ஆட்சியாளர்களும் உணர வேண்டும்.

நீதி அமைச்சர் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்கள் விரும்பாத அரசியல் தீர்வைக் கூட நடைமுறைப்படுத்த முடியாமைக்குக் காரணம் பேரினவாத சிந்தனையைத் தவிர சட்டப் பிரச்சினை அல்ல. அரசியலுக்காக அரசியல்கைதிகளைப் பயன்படுத்தி குளிர்காய நினைப்பது ஈனத்தனமான அரசியலாகும் - என்றுள்ளது. (ம-22)

## மகோற்சவம்

சாவகச்சேரி அருள்மிகு புராதன தான் தோன்றிவாரிவனநாதர் சுவாமி சமேத அமிர்த பாஷினி அம்பாள் உடனுறை சிவன் ஆலய (வாரிவனேஸ்வரம் பழைய சிவன் கோவில்) வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளைமறுதினம் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ய-159)





முல்லைத்தீவு - இருட்டுமடு தமிழ் வித்தியாலயத்தில் 25 வருடகால வரலாற்றில் முதல் தடவையாக புலமைப்பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

குறித்த பாடசாலையைச் சேர்ந்த யோகேஸ்வரன் மதுஷாந், மோகனராம் டிலக்ஷன் என்ற மாணவர்களே புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (ய-113)

## பொலிஸாருக்கு எதிராக

# ம.உரிமைகள் ஆணைக்குழுவில் வேலன் சுவாமிகள் முறைப்பாடு!



பொலிஸாரால் தான் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார் வேலன் சுவாமிகள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டு தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கெடுத்தார். ஜனாதிபதியின் வருகைக்கு எதிராகவும் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் வேல்ன் சுவாமிகளும் கலந்துகொண்டார். இதையடுத்து வேலன் சுவாமிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வன்முறையை தூண்டியமை, அதிகளவு நபர்களை ஒன்றுகூட்டியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியது. தான் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராகவே வேலன் சுவாமிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார். (ம-26-27-110-125)

# 1கிலோ சோளத்துக்கு 10 ரூபா விசேட வரி!

கால்நடைத் தீவன உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சோளத்துக்கு 10 ரூபா விசேட பொருள்கள் வரி விதிக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி ஜனவரி 26ஆம் திகதி முதல் பெப்ரவரி 25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு விசேட சரக்கு வரி விதிக்கப்படும் எனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-14-இ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 31

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் செ.கந்த.சத்தியதாசன் 'தைப்பூச நன் நாள்' என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகள் சிலவற்றின் பரீட்சை முடிவுகள் வருமாறு...

### யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை


ந.கபிர்னா -149, சே.சஞ்கிகா -144

### யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி


சி.தனஞ்சயன் -169, கு.கிஷாந் -156, தி.திஷான் -151 (ய-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நீங்கா நினைவலைகள்



18 ஆம் மாதம்
**நி.பரராஜசிங்கம்**



1 ஆம் ஆண்டு
**செ.நித்தியானந்தம்**



28 ஆம் ஆண்டு
**நி.அன்னலட்சுமி**

திதி: தைமாத வளர்பிறை தசமி (31.01.2023)

## இறையடியில் சாந்தி பெறுக!

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எந்நாளும் நீவீர் எம்மனதில் உயிர் வாழ்வீர்!
மண் விட்டு நீங்கள் விண்ணுலகம் சென்றாலும்
கண் விட்டு மறையவில்லை கடந்தகால எண்ணங்கள்!
இறையடியில் சாந்தி பெற நிறைவான அஞ்சலிகள்!

"அன்னவாசா", சண்டிலிப்பாய்

குடும்பத்தினர்

## இரண்டாம் மொழி சித்தியடைந்தவர்களுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 31

இரண்டாம் மொழி தேர்ச்சிபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் 80 தொடக்கம் 100 புள்ளிகள் பெற்றவர்கள் 25 ஆயிரம் ரூபாவையும், 65 தொடக்கம் 79 புள்ளிகள் பெற்றவர்கள் 20 ஆயிரம் ரூபாவையும், 50 தொடக்கம் 64 புள்ளிகள் பெற்றவர்கள் 15 ஆயிரம் ரூபாவையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (ம)


### விற்பனைக்கு

மில் பாவனைக்குரிய யக்கா பான்(Fan). அரிதட்டு. N-70 பொலிசர். 12" கிரைண்டர் மேலும் பல.
T.P: 077 991 2304

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி கோண்டாவில்
இராசமணி திருமண மண்டபத்திற்கு
அருகாக கொட்டைக்காடு வீதியில்
அண்ணளவாக 400 மீற்றர்
தூரத்தில் 2 பரப்பு சதுரக்காணி
விற்பனைக்குண்டு.தரகர்கள் இல்லை.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 070 786 0821

(CS 23205/3/6)


# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 11 . 1963



மறைவு 28 . 01 . 2023

**திருமதி கேமலா சிவசோதி**

**(ஓய்வுபெற்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்.)**

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேமலா சிவசோதி அவர்கள் கடந்த (28.01.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் விஜயலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும். காலஞ்சென்றவர்களான சபாபதி பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சிவசோதி (ஓய்வுபெற்ற புள்ளிவிபரவியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும். பிரதீபா (ஆசிரியர் - யா/ நெல்லியடி மத்திய கல்லூரி). சிந்துஜன் (நில அளவையாளர்). பிரசாந் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். கனகசபையின் (மேற்பார்வையாளர்) அன்பு மாமியாரும். சஹானாவின் அன்புப் பேர்த்தியாரும். மோகன்ராஜ் (டென்மார்க்). விஜயமாலா (கனடா). விஜயராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான பத்மாவதி. இராசரத்தினம். சண்முகராசா. தேவராசா (கனடா) சிவகுமார் மற்றும் யோகாம்பிக்கை (கல்முனை). கலைவதனி (டென்மார்க்). சுகுமார் (கனடா). வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**செல்வநாயகம் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்**
**021 222 0115**
**சிந்துஜன் (மகன்) - 077 1610054**
**பிரசாந் (மகன்) - 077 5748 654**
**கனகசபை (மருமகன்) - 077 45 98 135**

(CS 23211) 1/6

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 . 09 . 1951



மறைவு 01 . 01 . 2023

**அழகரத்தினம் சுபாஸ்கரன்**


01.01.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப தலைவர் அமரர் அழகரத்தினம் சுபாஸ்கரன் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.01.2023) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04 - 05 - 1953

உதிர்வு
26 - 01 - 2018

## அமரர் வி.எம்.கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(உரிமையாளர் - நியூ V.M.K. ஜுவல்லர்ஸ் - இல. 15, நவீனசந்தைக் கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி)

ஸ்தாபகர் - V.M.K. மில்ஸ்

**திதி: 31.01.2023 செவ்வாய்க்கிழமை**



ஆண்டுகள் ஐந்து ஆன போதிலும் ஆறவில்லை
எம் மனது ஆறாத துயரம் தான் எப்போதும் இது எமக்கு!
கண்களில் பனித்த கண்ணீர் காயவில்லை
இன்னமும் தான் காலமெல்லாம்
உங்களை நினைத்து ஏங்கியே காத்திருப்போம் !
புன்னகை பூத்த உங்கள்
பொன்முகம் தான் மறையவில்லை
வன்சொல் பேசாத உங்கள் வார்த்தைகள்
நிறைந்திருக்கும் எம் மனதில்!
எமது இல்லத்தில் பேரொளியாய் விளங்கி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
**ஆன்மா சாந்தியடையப்**
**பிரார்த்திக்கின்றோம்.**

கண்டி வீதி, சாவகச்சேரி.

**V.M.K. குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்நாட்டை...

தின நிகழ்வை வைத்து அரசியல் நடத்தவும் மாட்டார்கள் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர நாளை வடக்கு - கிழக்கில் கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி பேரணிக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இந்த நாட்டில் எதிர்த் தரப்பினரின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கி சிலர் தேசிய சுதந்திர தினத்தை கறுப்பு நாள் என்று சொல்வது - கரிநாள் என்று கூறுவது துரதிர்ஷ்டவசமே. அவ்வாறானவர்களின் விமர்சனங்களை ஒரு பக்கத்தில் தூக்கி வைத்துவிட்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க - நாட்டை நேசிக்கும் அனைத்து உறவுகளும் ஒன்றாகச் சங்கமிக்கவேண்டும்' என்று ரணில் குறிப்பிட்டார். (அ-ஒ-5-22)

## மின்வெட்டு...

இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. அதிகளவான மழை வீழ்ச்சி கிடைத்ததையடுத்து மின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் மின்தடை நேற்றும் இன்றும் அமுல்படுத்தப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## போராட்டத்தால்...

பட்டது. போராட்டத்தில் பங்கேற்றவர்களை உளவியல் ரீதியாக அச்சுறுத்தும் வகையில் புலனாய்வாளர்கள் ஒளிப்படம் எடுத்தனர்.

இலங்கையின் சுதந்திரநாளை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி அன்றைய நாள் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியை வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. பேரணிக்கு ஆதரவு திரட்டும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சந்திப்புக்களை மாணவர் ஒன்றியம் நடத்தி வருகின்றது.

அம்பாறையில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களை மாணவர் ஒன்றியத்தினர் நேற்றுச் சந்தித்துடன், அவர்களுடன் இணைந்து போராட்டத்தையும் மேற்கொண்டனர்.

'கண்ணீருக்கு தடை விதிப்போரிடம் நல்லிணக்கத்தை எதிர்பார்க்கலாமா?', 'வேண்டாம் வேண்டாம் ஓ.எம்.பி. வேண்டாம்', 'வேண்டும் வேண்டும் சர்வதேச நீதி வேண்டும்', 'எங்கள் குருதியை உறிஞ்சினாய் எதுவரை எங்கள் கண்ணீரை உறிஞ்சுவாய்?', '2லட்சம் பிச்சை வேண்டாம்' ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்தனர். (அ-ஒ-125)

## மின்தடை...

மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சக்தி அமைச்சுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் இலங்கை மின்சார சபைக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய இருந்த நிலையில் மனித உரிமைகள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது. (அ-ஒ-இ)

## பதிவேட்டில்...

சபை அமர்வு நேற்று ஆரம்பமானது. மேயராக இ.ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ள வ.பார்த்தீபன், 'சட்டவிரோதமாகவே மேயர் தெரிவு நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்கின்றோம்' எனத் தெரிவித்து வெளியேறினார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சபை அமர்வில் பங்கேற்றனர். (அ-ஒ-27)

## ஊடகர்...

புகையிரத விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தெஹிவளை பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். சடலம் அங்கிருந்து மீட்கப்பட்டு கொழும்பு களுபோவில மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுயாதீன ஊடகவியலாளராகக் கடமையாற்றி வந்த எஸ்.என். நிபோஜன், பல அச்சுறுத்தல்கள் மத்தியிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டங்கள், காணி விடுவிப்பு போராட்டங்கள், மீள் குடியேறுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்தவர்.

சிறந்த ஒளிப்பட ஊடகவியலாளனாக பல கதை சொல்லும் ஒளிப்படங்களை வெளிப்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)


**VACANCIES**

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு **யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாக** பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- கணினிப்போதனாசிரியர் - அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)
- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர் G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம் (ஏனையோர் ஊதியத்துடன் 4 மாத பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்)

ஏனைய பதவி வெற்றிடங்கள் - அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)

# வரவேற்பாளர்
# சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்
# கிளை முகாமையாளர்

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை WhatsApp இல் அனுப்பி வைக்கவும்.

**WhatsApp 076 135 45 00**

DMI COMPUTER EDUCATION No.113, Kannathiddy Road, Jaffna.


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 11.02.1941 மறைவு 29.01.2023

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் க.திசாகரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**நாகலிங்கம் கனகரட்ணம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச் சங்கம்.

## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 10 . 1957



உதிர்வு 27 . 01 . 2023

**கௌரிமணி மயில்வாகனம்**

உடுவில் சிவஞானப்பிள்ளையார் (சங்கர உடையார் பிள்ளையார் கோயில்) கோயிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கௌரிமணி மயில்வாகனம் அவர்கள் (27.01.2023) வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் கணேசம்மா தம்பதிகளின் கனிஸ்ட புத்திரியும், இந்துசேகரம், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், சக்திதாசன், ஜெயலட்சுமி, காலஞ்சென்ற கலாமணி, கௌரிசங்கர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 16.12.1998 மறைவு 31.01.2022

அமரர்
**சிவகணநாதன் திவாஹரி**

(சப்பிரகமுவ பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவி)

ஆண்டொன்று ஆனாலும் உம்
அன்பின் நினைவுகள் என்றும் எம்
மனதை விட்டகலாது உம் பாச
நினைவுகள் என்றென்றும் என் மனதை
விட்டகலாது

"எம் ஆயுள் உள்ளவரை உன் நினைவுகள்
எம் மனதில் வலிகளாக தொடரும் திவாஹரி"

இணுவில் மேற்கு, இணுவில் — நினைவுகளுடன் குடும்பத்தினர்

(CS 23207)(3/6)

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.05.1980 மறைவு 16.01.2019

**அமரர் தங்கராசா ஜெயராகவன்**

(திதி:- தைமாத வளர்பிறை தசமி)

அன்புச் செல்வமே ராகவா
ஆண்டுகள் 4 சென்றாலும் ஆறாத்துயரத்தை
தந்து விட்டுச் சென்றுவிட்டாய்
நித்தம் நித்தம் உன் பிரிவுத்துயர்
தாங்காது கலங்கித் தவிக்கின்றேன்
உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும் உன் அம்மா
தங்கராசா நாகேஸ்வரி (தவம்),
ஜெயலட்சுமி (அக்கா), தங்கவேல் (அத்தான்),
மருமக்கள் – ஷயந்த் (சுவிஸ்), அதிஷயா (சுவிஸ்),
நிமிஷா (சுவிஸ்)
பெரிய மணல், காரைநகர்.

(CS 228894)(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாவற்குழி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த சங்காபிசேகம் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம்பெற்றது. (ய-159)

## இளைஞன் விபத்தில் சாவு;
# குழப்பம் விளைவித்தோர் உறவினர்கள் அல்லர்

யாழ்ப்பாணம், ஜன. 31

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தைய டுத்து, சடலத்தை உடனடியாக விடுவிக் கக்கோரி சாவகச்சேரி மருத்துவமனை யில் குழப்பம் விளைவித்தவர்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சங்கத்தானையில் இடம்பெற்ற விபத் தில் நகைக்கடை உரிமையாளரான சண்முகலிங்கம் பிரதாப் (வயது-38) என்பவர் உயிரிழந்திருந்தார். அவரது சடலம் சாவகச்சேரி மருத்துவமனை யில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் போது அங்கு திரண்ட சிலர் குழப்பம் விளைவித்திருந்தனர். அதில் அரசியல் கட்சியின் ஆதரவாளர்களும் உள்ளடங் குகின்றனர். எனினும் அவர்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று குடும்பத்தினர் மறுத்துள்ளனர். அத்துடன் உயிரிழந்தவரின் சகோதர ரும் சில மாதங்களுக்கு முன்னர் விபத் தில் உயிரிழந்தார் என்று வெளியான தகவல் தவறு என்றும் அவர் நோய் காரணமாகவே உயிரிழந்தார் என்றும் குடும்பத்தினர் தெரிவித்தனர். (அ-ஒ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மு/மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் (துணுக்காய் வலயம்) 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி **145 புள்ளிகளைப்** பெற்று பாடசாலையில் **முதல்முறையாக** சித்தியடைந்த



Congratulations

**செல்வன்**
**தரனீஸ்வரன் தனுஜன்**
**(145 புள்ளிகள்)**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு
அவரை சித்திபெற கற்பித்த
**அதிபர் - திரு.புண்ணிமூர்த்தி கஜந்தன்**
**ஆசிரியர் - திருமதி சசிகரன் - கவிதினி**
**திருமதி ஜெயபாலன் - சுதர்சினி**
ஆகியோருக்கு எமது நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்வதோடு, மேலும்
பல்கலையும் கற்று பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

Congratulations

**வாழ்த்துவோர்:**
**அப்பா-தரனீஸ்வரன் (அமரர்)**
**அம்மா - ரூபானி**
**அம்மப்பா - செல்லத்துரை**
**அம்மம்மா - அற்புதராணி**
**மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார்,**
**சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார்,**
**அண்ணா, அக்கா, தம்பி, தங்கை,**
**மச்சான், மச்சாள்**

Congratulations!

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 17 . 05 . 1945 |  | 11 . 02 . 2022 |

### அமரர் ஆறுமுகம் அன்னலட்சுமி

**திதி - பூர்வபக்க தசமி**

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே அம்மா!
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நினைவுகளுடன்**
**மகன்**

(CR 39169) 1-6

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி தர்மலிங்கம்

**தோற்றம்:- 03.07.1942** **மறைவு:- 29.01.2023**



காங்கேசன்துறை, போயிட்டியை பிறப்பிட மாகவும், நகுலேஸ்வராவீதி, கீரிமலையினை வசிப்பிடமாகவும், கய்பல்வளவு ஐயனார் கோவில் வீதி, சுன்னாகத்தினை தற்போதைய வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி தர்மலிங்கம் கடந்த (29.01.2023) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா இளையபிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி லட்சுமி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்க ளான நாகேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் தேவராஜா,பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சண்முகராசா,இரத்தினம்,கனகேஸ்வரி,சரஸ்வதி மற்றும் கந்தசாமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் பால கிருஷ்ணன் ( ஆசிரியர் - கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை ). சரன்ஜா ( சுவிஸ் ) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானலிங்கம் ( சுவிஸ் ), கலாநிதி அருளரசி ( சிரேஷ்ட விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம் ) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனென்ஜன் (சுவிஸ்). ஹரிணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2023) செய்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பகல் 10.00 மணியளவில் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்துமயானத்துக்கு பூதவுடல் எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பாலகிருஷ்ணன் (மகன்)**

**077 617 9115**

(CS 23197)4-6

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 - 08 - 1985 |  | 29 - 01 - 2023 |

### சண்முகலிங்கம் பிரதாப்

**(உரிமையாளர்-வதனி ஜீவல்லறி, கொடிகாமம்)**

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும், பிரான்ஸ் மற்றும் சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் பிரதாப் அவர்கள் நேற்றுமுன்தினம் (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சண்முகலிங்கம் - ஈஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மோகன்-ஜெயமதி (மதி) தம்பதியினரின் பாசமிகு மருமகனும், மயூரி (செயலக உதவியாளர்- மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், சிவப்பிரியா, காலஞ்சென்ற லதுர்ஜிகாந், மதிவதனி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தில்குமரன் (சுவிஸ்), திவாகரன் (லண்டன்), துவாரகன் ஆகியோரின் மைத்துனனும், சிவ தேனிஜன், சுகிவர்ணவி, வதுர்ஷா, முகிலன், மயூரி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (01.02.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 618 4573**
**077 078 2259**

**பொற்தொழிலாளர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பை...

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் மாத்திரமே கட்சியின் கட்டமைப்புக்களை வலுப்படுத்தமுடியும் - என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரே தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்டத்தொகுதிக்கிளை செயலர்கள், இளைஞர் மற்றும் மகளிர் அணிச் செயலர்கள், மார்டின் வீதியிலுள்ள கட்சித் தலைமையகத்துக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டிருந்தனர். கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில்கூட்டம்நடைபெற்றிருந்தது. கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நடவடிக்கை தொடர்பில் அதிருப்தி வெளியிட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்ததைப்போன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையும் உடைக்கும் வேலையில் சுமந்திரன் ஈடுபடுகின்றார் என்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவின்போது தனது ஆதரவாளர்களுக்கு மாத்திரமே அவர் ஆசனங்கள் வழங்கியுள்ளதாகவும், கட்சியின் நீண்டகால மற்றும் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவுக்கு ஆதரவானோருக்கு இடம்வழங்கவில்லை என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. மேலும் வேட்புமனுத் தயாரிப்புக்கள் கடந்த காலத்தில் கட்சித் தலைமையகத்தில் முன்னெடுக்கப்பட்டபோதும் இம்முறை சுமந்திரனின் வீட்டில் வைத்து தயாரிக்கப்பட்டதுடன் அவற்றின் பிரதிகளை இன்னமும் கட்சிக்கு வழங்கவில்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டது.

சுமந்திரனுக்கு எதிராகக் கட்சித்தலைமை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மாவை.சேனாதிராசாவிடம் அவரது மகன் கலையமுதனும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமந்திரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமல் கட்சியை மறுசீரமைக்க முடியாது என்றும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கட்சித் தலைவருக்கு தெளிவாக இடித்துரைத்துள்ளனர். (அ-ஓ-5)

## தேர்தல்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு, வேட்புமனு கையேற்கும் இறுதி நாளன்று அறிவித்திருந்தது. ஆனாலும் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இலங்கை அரச அச்சகக் கூட்டுத்தாபனமும் நேற்றுமுன்தினம் இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில், 'தேர்தல்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் கையெழுத்துடன் தமக்கு எந்தவொரு அறிவித்தலும் கிடைக்கவில்லை' என்று தெரிவித்திருந்தது.

கடந்த 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின்போது கூட இவ்வாறான தொரு வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கவில்லை.

இத்தகைய வர்த்தமானி சட்டப்படி தேவையான ஒன்று என்றபோதும், பொதுவில் இந்த வர்த்தமானி வெளியிடப்படாமை தொடர்பில் எவரும் கேள்விக்கு உட்படுத்துவதில்லை.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அவர்களது கட்சிகள், சின்னங்கள் மற்றும் தேர்தல் திகதி, இடம் என்பனவற்றைக் குறித்து மூன்று பிரிவுகளாக வர்த்தமானி வெளியிடப்படவேண்டும்.

கடந்த 2018 ஆம் ஆண்டுக்குரிய வர்த்தமானி கூட இப்போதுதான் தேர்தல்கள் திணைக்களத்தால் சரிபார்த்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது தேர்தல் நடக்குமா? என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளமையால் தேர்தல்கள் ஆணைக்குழு, தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கும் வகையில் தேர்தல் திகதி மற்றும் இடம் என்பவற்றை மாத்திரம் குறிப்பிடும் வர்த்தமானியை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனியே வெளியிட்டுள்ளது. இணையத்தில் வர்த்தமானி நேற்று வெளியானபோதும் அதனை இன்று தான் பதிவிறக்கம் செய்யக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஓ-5)

## தபால்மூல...

தேவையான அடிப்படை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-ஓ-இ)

## தாயின்...

இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வாரம் 17 வயதுப் பெண்ணுக்கு அவருடைய தாயார் சிறுநீரகத்தைத் தானமாக வழங்கியிருந்த நிலையில், அதற்குரிய சத்திர சிகிச்சை கடந்த 18 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது.

சத்திர சிகிச்சைக் கூடத்தில் 4 மணித்தியாலமாக நடைபெற்ற சத்திர சிகிச்சையின் பின்னர் வெற்றிகரமான முறையில் தாயாரின் சிறுநீரகம் அவரது பிள்ளைக்கு மாற்றப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்று மைல்கல்.

சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் பொதுமக்கள் யாராவது சிறுநீரகம் செயலிழந்த தங்களுடைய உறவினர்கள் யாருக்காவது சிறுநீரகத்தை தானமாக வழங்க முன்வந்தால் அதற்குரிய மருத்துவப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முன்னெடுக்கமுடியும் - என்றார். (அ-ஓ-27)

## சபைக்குத்...

பிக்கப்பட்டு சபை அனுமதிக்கும் வரையில், ஒப்பந்தம் தொடர்பில் எந்தவொரு நகர்வும் முன்னெடுக்கக்கூடாது எனவும், இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு உடனடியாகக் கடிதம் மூலம் அறிவிப்பதுடன் அதன் பிரதிகள் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்றும் யாழ். மாநகரசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையில் 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதிய கூட்டத்திலும், 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிய கூட்டத்திலும் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் தனது கிளை நிறுவனம் ஊடாக மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் 80 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அதற்கான ஒப்புதலை சபை வழங்கியிருந்தது.

ஆனால், சபையில் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு புறம்பான வகையில் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டதாகவும், அந்த ஒப்பந்தம் மாநகரசபைக்குச் சமர்ப்பிக்கப்படாமல், முன்னாள் மேஜர் வி.மணிவண்ணன் மற்றும் ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் கையெழுத்திட்டு தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்துக்கு அனுப்பியுள்ளதாகவும் சபையில் நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டது.

'சபையின் தீர்மானத்துக்குப் புறம்பாக சில விடயங்கள் உட்சேர்க்கப்பட்டு தனியார் நிறுவனத்துக்குச் சாதகமான வகையில் ஒப்பந்த வாசகங்கள் அமையப்பெற்றுள்ளன' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினரொருவர் குற்றம் சுமத்தினார்.

இந்த ஒப்பந்தத்தின் பிரதி மாநகரசபையில் இல்லை என்று தற்போதைய மேஜர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார்.

'அந்த ஒப்பந்தத்தில் நானும், அப்போதைய மேஜரும் கையெழுத்திட்டோம்' என்று ஆணையாளர் த.ஜெயசீலன் சபையில் குறிப்பிட்டார்.

'யாழ். மாநகரசபையானது தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் 80 மில்லியன் ரூபா விளம்பர விடயமாக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக ஆணையாளரால் கூறப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் அதில் ஒப்பமிட்ட இருவரைத் தவிர சபையில் உள்ள ஏனையோருக்குத் தெரியாது என்பதால், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணியையும் அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியாது என சபை தீர்மானித்தது. அத்தோடு தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் பணத்தை மாநகர சபைக்கு வழங்க முன்வருமிடத்து அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் ஒப்பந்தத்தின் மொழிபெயர்ப்பு தமிழில் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டு சபை பரிசீலித்து அனுமதி வழங்கினால் மட்டுமே அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவேண்டும் எனவும் குறித்த நிறுவனம் மாநகரசபையுடன் மேற்கொண்ட ஒப்பந்தம் தொடர்பில் எழுப்புகின்ற கேள்விகளுக்கோ சட்டரீதியான விடயங்களுக்கோ சபையில் உள்ள உறுப்பினர்கள் பொறுப்பாளிகள் இல்லை என்றும், சபைக்குத் தெரியப்படுத்தப்படாமல் இரகசியமாக அல்லது திருட்டுத்தனமாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு சபை பொறுப்பல்ல என்றும் நிறுவனம் ஒப்பந்தம் தொடர்பில் நிதிசார் நடவடிக்கை எடுப்பின் அதனை சபை செலுத்த முடியாது' எனவும் மாநகர சபையில் தீர்மானம் ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டது. (அ-ஓ-5-26-27)

## எனது...

அனைத்து பணிகளையும் நிறுத்துமாறு யாழ். மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் உத்தரவிட்டுள்ளதாகவும் அதனைக் கண்டிப்பதாகவும், முன்னாள் மேஜர் வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது ஆட்சியைக் கவிழ்த்து உள்ளூராட்சி ஆணையாளராலே தெரிவு செய்யப்பட்ட சட்டவிரோதமான முதல்வர் சட்டவிரோதமாகச் சபையைக் கூட்டி தீர்மானமொன்றை எடுத்ததாகக் கேள்விப்பட்டோம். அத்துடன், கல்வியன்காட்டுச் சந்தையில் எமது முயற்சியால் கட்டடமொன்று திறந்து வைக்கப்பட்டது. அதிலே நடப்பட்ட கல்லையும் உடனடியாக அகற்ற வேண்டும் என்ற தீர்மானத்தையும் கொண்டு வந்தார்.

நான் முதல்வராக இருந்தபோது நாடு பொருளாதார நிலையிலே பாதிக்கப்பட்டிருந்தாலும் தனியார் நிறுவனங்களின் கால்களிலே விழுந்து இவ்வாறான பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தேன்.

ஆனால், யாழ். மாநகர முதல்வர் ஆர்னோல்ட், முன்னர் முதல்வராக இருந்த போதுசட்டவிரோதமாக தனதுபுதுவீட்டைக் கட்டினார். அதுதான் அவர்செய்த விடயம். 8 கோடி ரூபா பெறுமதியான செயற்றிட்டத்தை நிறுத்தியதைப் போல் நான் தனியார் நிறுவனங்களிடம் கெஞ்சி மன்றாடிப் பெற்ற நிதியின் மூலம் கட்டிய ஆரிய குளத்தையும் இடிக்கப் போகின்றாரோ தெரியாது.

சட்டவிரோதமாக இரவோடிரவாக தன் பணச் செல்வாக்கு மற்றும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி திருட்டுத்தனமாக முதல்வராக வந்தார். இவர் மாநகர சபை உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கினார் என்ற செய்தியும் முகநூல் வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

நாங்கள் கடந்த காலங்களில் மேற்கொண்ட ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களைச் சிதைப்பவர்களின் செயற்பாடுகளுக்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே இதை மக்கள் சரியாகப் புரிந்து கொண்டு எதிர்வரும் தேர்தலில் சட்ட விரோதிகளை நகரத்திலிருந்து அடித்து விரட்ட வேண்டிய தேவைப்பாடு மக்களுக்குக் காணப்படுகின்றது. இதற்கு பொது மக்கள் தக்க பதிலடியை வழங்கவேண்டும் - என்றார். (அ-ஓ-26-27)

## சுமந்திரன்...

கே.வி.தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையுடன் ஒரே நிலைப்பாட்டில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளையும் இணைத்துப் பயணிக்கவேண்டும் எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளேன். ஆனால் அதிகாரம், பதவி ஆசை காரணமாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்தவர்கள் கூட்டமைப்பின் பிளவுக்குக் காரணமாக இருந்துள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் 'தமிழ்க் கூட்டமைப்புக்குள் இருக்கும் ஆமை சுமந்திரன்' என பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் பேசினார். அவரது கருத்துத் தொடர்பில் தமிழ் மக்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒன்றாக இருந்தவர்கள் தொடர்பில் பெயர் குறிப்பிடாமல் தூள் வியாபாரிகள், காட்டிக் கொடுப்பவர்கள் என விமர்சனம் செய்துள்ளார். அவர் யாரைக் குறிப்பிட்டார் எனத் தெரியாது. தூள் விற்பவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். ஒரு விடயத்தைச் சொல்வதாயின் அதைப் பூடகமாகச் சொல்லாமல் நேரடியாகச் சொல்லவேண்டும்.

செல்வம் அடைக்கலநாதன் சரியாகச் செயற்பட்டுள்ளார். கூட்டமைப்புக்குள் ஆமை வந்து விட்டது. சுமந்திரன் வந்து விட்டார் என்றார். சுமந்திரனுக்குப் பெயர் சொல்லி விமர்சிக்கும் துணிவில்லை. சிறிய, வட்டாரத் தேர்தலுக்காக இப்படித் தனிமனிதத் தாக்குதலில் ஈடுபடுவது வெட்கக்கேடு. இப்படி விமர்சித்து விட்டு மீண்டும் இணையமுடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றால் ஒரு கட்சியை மட்டுமே குறிப்பிடுவது அல்ல ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இணைந்து இருப்பதே கூட்டமைப்பு. தற்போதைய நிலையைப் பார்த்து ரணில் சிரிப்பார். சுமந்திரன் எதற்காக வந்தாரோ அதை நிறைவேற்றிவிட்டார் - என்றார். (அ-ஓ-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசுக் கட்சியுடன் பயணம் சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், ஜன. 31
கட்சி ரீதியாக இரா.சம்பந்தனுடனோ அல்லது மாவை சேனாதிராசாவுடனோ சேர்ந்து பயணிக்கக்கூடிய சாத்தியம் இல்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கடந்த காலங்களில் சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராசா போன்றோர் முக்கியமான சந்தர்ப்பங்களில் இணைந்து பயணித்திருந்தனர். எதிர்காலத்தில் சேர்ந்து பயணிப்பதற்கான சாத்தியங்கள் இல்லை.
மேலும், இலங்கையின் சுதந்திரதின நிகழ்வில் 1958 ஆம் ஆண்டு கலந்துகொண்டேன். அதன் பின்னர் கலந்துகொள்வதில்லை. தமிழ் மக்களுக்கு இதுவரை சுதந்திரம் கிடைக்கவில்லை. எமக்கான உரிமை கிடைத்தால் மாத்திரமே கலந்துகொள்வேன். சுதந்திர நாளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் முன்னெடுக்கும் பேரணியை வரவேற்கின்றேன், என்றார்.
(அ-ஒ-26.27)

# 15 வயதுச் சிறுமியுடன் குடும்பம் நடத்தியவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 31
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமியுடன் குடும்பம் நடத்திய திருகோணமலையைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.வேலை நிமித்தமாக முல்லைத்தீவுக்கு வந்த இளைஞர், சிறுமியுடன் குடும்பம் நடத்தி வந்துள்ளார். இது தொடர்பில் அயலவர்களால் முல்லைத்தீவுப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இளைஞரைக் கைது செய்தனர். சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.
(அ-ஒ,19)

## மதுபோதையில் பிக்குகள் கைது

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிக்குகள் எனச் சந்தேகிக்கப்படும் 6 இளைஞர்கள் மது போதையில் கண்டி நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கண்டி தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ரசிக சம்பத் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே, கண்டி மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இந்தக் குழுவினரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் 5 பேர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிக்குகள் எனவும் ஒருவர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிக்கு எனவும் தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸார் விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர்.
(ம)


**Online Mathematics and Computer Science Tutoring**

By Canadian Trained Teacher in Both Tamil and English Medium

**Taught By : Mr. Nanthivarman**

Credentials : BSc, State University of New York Institute of Technology
BEd, Ontario Institute For Studies In Education
MMT (Pending), University of Waterloo
OCT (Ontario Certified Teacher)

**O/L Mathematics**
**G.C.E A/L Combined Mathematics**
**Programming in Python / Java / C++**

- State of the Art Learning Management Platform
- Readily Available Digital Handouts & Notes
- Ongoing Assessments
- Affordable Tuition Fees
- Free Consultation for Higher Education in Canada.

visit www.mathemperor.ca
for further details:
Whats App contact :
+1416 821 9591



## மணப்பெண் தேவை

01. அச்சுவேலி-புத்தூர். இந்து. கௌரவகுலம் (K). 1986. அனுசம். Administrative Professional, France Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 25869
02. சுன்னாகம்-உடுவில். இந்து. கௌரவகுலம் (K). 1983. புனர்பூசம்: Gradute, Network Operation Engineer, USA Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28442
03. சுன்னாகம்- சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (K). 1996. மிருகசீரிடம். B.Sc Engineering, Australia Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 32933
04. உரும்பிராய். இந்து. கௌரவகுலம் (V). 1974. திருவோணம். BSc,Finance Advisor, Canada Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 23110
05. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1982. அத்தம். Masters In Electrical Engineering (USA), Divorce, USA Citizen, மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 24750
06. Jaffna Town, RomanCatholic, கௌரவகுலம் (V). 1984, BBA, International Business Management, USA Citizen, மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 28771
07. மல்லாகம்-உடுவில். இந்து. கௌரவகுலம் (V). 1984. சுவாதி. BSc,Masters In Statistics, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28963
08. முல்லைத்தீவு. இந்து. குருகுலம். 1981. அத்தம். A/L, Accountant, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. A/L படித்த பெண் போதுமானது. பதிவெண் - 29301.
09. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1986. உத்திராடம். Airspace Engineer, USA Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண்- 27891
10. மானிப்பாய்-பனை. இந்து. கௌரவகுலம் (V). 1979. கார்த்திகை. Graduate, Canada Citizen, Divorce(Nullified), மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28457.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728


# ஐஸுடன் கைதானவர் பொலிஸால் விடுவிப்பு?

மன்னார், ஜன. 31
மன்னாரில் நேற்றுமுன்தினம் காலை விசேட அதிரடிப்படையால் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டபோதும், நீதிமன்றில் முற்படுத்தப்படாமல் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.
அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு அண்மையாகவுள்ள காணியிலிருந்து 4 கிராம் 54 மில்லி கிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் காணியின் உரிமையாளர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.
விசாரணைகளை முன்னெடுத்த விசேட அதிரடிப்படையினர் சந்தேகநபரையும், உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளையும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
பொலிஸார் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தாது விடுவித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.
(அ-ஒ,56)


## வீட்டுப்பணிப்பெண் தேவை

கொக்குவிலிலிருந்து 5KMற்கு உட்பட்ட பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
T.P: 074 018 4813

## விற்பனைக்கு

NP PP-xxxx எனும் இலக்கமுடைய வட்டா வாகனம் விற்பனைக்கு உண்டு.
127, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் 077 592 5450

## வீடு வாடகைக்குத் தேவை

நீர்வேலி, சிறுப்பிட்டி பகுதியில் இரு குழந்தைகள் உள்ள சிறிய குடும்பத்திற்கு Attached Bathroom உள்ள வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 076 613 8192, 077 500 8327

## தேவை

ஆரம்பக்கல்வி வகுப்புக்கள் நடாத்துவதற்காக நாவலர் வீதி, நல்லூர், கல்வியங்காடு ஆகிய சூழலில் (பிரதான வீதியில் இருப்பின் விரும்பத்தக்கது) வீடு வாடகைக்குத் தேவை.
(CS/23200)4,6
076 115 0212


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் சொக்கலட் விற்பனை கடை ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
076 005 5829


# மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 09 - 1930

மறைவு 29 - 01 - 2023



## அமிர்தநாதர் பிரான்சிஸ்

(ஓய்வுபெற்ற, இலங்கை மின்சார சபை ஊழியர்)

இல. 06, மத்திய மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற, இலங்கை மின்சாரசபை - ஊழியர்) நேற்றுமுன்தினம் (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோனியாப்பிள்ளையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான அமிர்தநாதர் - செபமாலை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான அத்தனாஸ் - செபஸ்ரியானா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான எலிசபெத், றிச்மன்ட் (இளைப்பாறிய அதிபர்), கிறிஸ்தோப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும், ஜான்சி, மேசி (ஜேர்மன்), யான்சன் (பிரான்ஸ்), ஜொய்சி (பிரான்ஸ்), டள்சி (பிரான்ஸ்), காலஞ்சென்றவரான டேமியன் றெறன்ஸ் (குட்டியன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குட்டிதம்பி, சூசைதாசன், ஜீன், கிறிஸ்ரியன், ஸ்ரனிஸ்லோஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி : 0094 77 672 5281
டிஸ்மன் : 0094 77 420 0155
ஜெறோணா : 0094 77 420 5180

தகவல்:
குடும்பத்தினர்

(CS 48830) (3/6)



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org